UK Government

# அவசரகால எச்சரிக்கைகள் அமைப்பு விவரத் தாள்

## எதிர்வரும் தேசியத் தேர்வு

UK-இன் அவசரகால எச்சரிக்கைகள் அமைப்பு **செப்டம்பர் 7, 2025 ஞாயிற்றுக்கிழமை** அன்று **மதியம் சுமார் 3 மணிக்கு (3:00 PM)** தேசிய அளவில் சோதிக்கப்படும். கூடுதல் தகவல்களுக்கு, gov.uk/alerts-ஐப் பார்வையிடவும்.

## அவசரகால எச்சரிக்கைகள் பற்றி

அவசரகால எச்சரிக்கைகள் அமைப்பு, அவசரகாலத்தில் மக்கள் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் அவர்களுடைய மொபைல் போன் மற்றும் டேப்லட் மூலம் அவர்களைத் தொடர்புகொள்ள உதவுகிறது. இந்த அமைப்பு கடுமையான வெள்ளம் போன்ற, உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் சூழ்நிலைகளைப் பற்றி உங்களை எச்சரிப்பதற்குப் பயன்படுத்தப்படும்.

அவசரகால எச்சரிக்கைகள் என்பவை உயிருக்கு ஆபத்து ஏற்படும்போது ஒத்திசைவு கொண்ட 4G மற்றும் 5G மொபைல் போன்கள் மற்றும் டேப்லட்களுக்கு அனுப்பப்படுகின்ற செய்திகள் ஆகும். அரசாங்கமும், அவசரகாலச் சேவைகளும் மட்டுமே அவற்றை அனுப்ப முடியும். எச்சரிக்கை உண்மையானது தானா என்பதை gov.uk/alerts-இல் நீங்கள் சரிபார்த்துக்கொள்ள முடியும். அவசரகால எச்சரிக்கைகளுக்குத் தனிப்பட்ட தகவல்கள் (உங்கள் தொலைபேசி எண், அடையாளம் அல்லது இருப்பிடம் போன்றவை) தேவையில்லை. அவசரகால எச்சரிக்கைகள் ஒருவழிப் பாதை ஆகும், அவை அரசாங்கத்திற்கு எந்தப் பின்னூட்டமும் வழங்குவதில்லை.

அவசரகால எச்சரிக்கைகள், அவசரகாலச் சூழ்நிலைகளைப் பற்றி அரசாங்கம் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்துவதற்கான பல வழிகளில் இதுவும் ஒன்றாக இருக்கும். எனவே உங்களிடம் மொபைல் போன் இல்லையென்றால், கவலை வேண்டாம் – ஊடகங்கள் மூலமும் உள்ளூர் அவசரநிலைச் சேவைகள் மூலமும் உங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்படும்.

அவசரகால எச்சரிக்கை SMS ‘உரைச் செய்திகள்’ போன்ற பிற வகை செய்திகளிலுருந்து வடிவத்திலும் ஒலியிலும் மிகவும் வேறுபட்டு இருக்கும்.

UK Government

நீங்கள் உரத்த சைரன் போன்ற ஒலியைக் கேட்பீர்கள் என்பதாலும், உங்கள் போன் ஒரு தனித்துவமான அதிர்வைப் பயன்படுத்தும் என்பதாலும், ஓர் அவசரகால எச்சரிக்கை எழுப்பப்படும்போது நீங்கள் அதை அறிந்துகொள்வீர்கள். உங்கள் திரையில் தோன்றும் ஒரு செய்தி ஓர் அவசரகால நிலை ஏற்பட்டுள்ளது என்பதையும், நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதையும் பற்றி உங்களுக்குச் சொல்லும். உங்கள் போனின் அம்சங்களைப் பொருத்து, திரை உருப்பெருக்கத்துடன் எச்சரிக்கை வேலை செய்யும். ஒலியளவு அமைப்புகளை மீறியுள்ளீர்கள் என்ற செய்தியையும் நீங்கள் படிக்கலாம். போனில் வெளியிடப்படும் தனித்துவமான சத்தம் செவித்திறன் கருவியைப் பயன்படுத்துபவர்களும் கேட்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

நீங்கள் ஓர் எச்சரிக்கையைப் பெற்றால், அந்தச் செய்தியைக் கவனமாகப் படித்து அதில் உள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும். மீண்டும் ஒரு முறை அவ்வாறான செய்தியைப் பெற்றால் அவற்றின் தோற்றத்தையும் உணர்வையும் நினைவில் கொள்ளவும்.

அவசரகால எச்சரிக்கைகளில் இருந்து நீங்கள் விலகிக்கொள்ளலாம். ஆனாலும், உங்கள் உயிருக்கு ஆபத்து நிலவும்போது உங்களை எச்சரிக்கும் வகையில் இந்த அமைப்பு திட்டமிடப்பட்டுள்ளதால் அவற்றை இயங்கும் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்று நாங்கள் வலுவாகப் பரிந்துரைக்கிறோம். நீங்கள் விலகிக்கொள்ள விரும்பினால், ‘அவசரகால எச்சரிக்கைகள்’ என்பதை உங்கள் அமைப்புகளில் தேடிக் கண்டுபிடித்து, அவசரகால எச்சரிக்கைகளை அணைக்கவும். அவ்வாறு செய்ய முடியாவிட்டால், உங்கள் சாதனத்தின் உற்பத்தியாளரைத் தொடர்புகொள்ளவும். கூடுதல் ஆலோசனைக்கு, gov.uk/alerts/opting-out-ஐப் பார்வையிடவும்

## வாகன ஓட்டிகளுக்கான எச்சரிக்கை

வாகனம் அல்லது மோட்டார்சைக்கிள் ஓட்டும்போது நீங்கள் மொபைல் போன் பேசக் **கூடாது**. அவ்வாறு செய்வது சட்டவிரோதம் ஆகும். வாகனம் ஓட்டிக்கொண்டிருக்கும்போது நீங்கள் ஓர் எச்சரிக்கையைப் பெற்றால், போனை எடுத்து அந்தச் செய்தியைப் பார்க்க முயற்சிக்கக் கூடாது. வழக்கம்போல, முழுக் கட்டுப்பாட்டுடன் வாகனத்தைத் தொடர்ந்து ஓட்டவும். போனைப் பார்க்க வேண்டும் என நீங்கள் நினைத்தால்,

UK Government

வாகனத்தை ஒரு பாதுகாப்பான, சட்டப்பூர்வமான இடத்தில் நிறுத்த வேண்டும்.